சுதந்திர இந்தியா @75

நேர்மையுடனான தற்சார்பு

தமிழ்நாடு அரசு

## அகில இந்தியக் குடிமைப்பணித் தேர்வு பயிற்சி மையம் சென்னை-28.

குடிமைப் பணிகளுக்கான கட்டணமில்லா பயிற்சி (ஐ.ஏ.எஸ்.,ஐ.பி.எஸ்.,)

2023 ஆம் ஆண்டு முதல்நிலைத் தேர்வுப் பயிற்சி

தமிழக அரசின் அகில இந்தியக் குடிமைப்பணித் தேர்வுப் பயிற்சி மையம், தமிழ்நாட்டைச் சேர்ந்த இளம் பட்டதாரிகள் மற்றும் முதுநிலை பட்டதாரிகள் ஆகியோருக்கு, **28.05.2023 (ஞாயிற்றுக் கிழமை)** அன்று நடைபெற இருக்கும் மத்திய குடிமைப்பணித் தேர்வுக்கான கட்டணமில்லாப் பயிற்சியினை அளிக்க உள்ளது.

சென்னை, அகில இந்தியக் குடிமைப்பணித் தேர்வுப் பயிற்சி மையத்தில் கட்டணமில்லாமல் தங்கும் வசதி, சத்தான உணவு மற்றும் தரமான நூலகம், காற்றோட்டமுள்ள வகுப்பறைகள் ஆகியவற்றை வழங்குகிறது. இப்பயிற்சி மையம் 225 முழுநேரத் தேர்வர்களையும், 100 பகுதிநேரத் தேர்வர்களையும் முதல்நிலைப் பயிற்சிக்காக அனுமதிக்கிறது. அதே போன்று அண்ணா நூற்றாண்டு குடிமைப் பணித்தேர்வுப் பயிற்சி நிலையங்கள் கோயம்புத்தூர் மற்றும் மதுரை ஆகிய பயிற்சி மையங்களில் தலா 100 முழுநேர தேர்வர்களை முதல்நிலைத் தேர்வுக்காக அனுமதிக்கின்றன. மேற்குறித்த முதல்நிலைத்தேர்வு பயிற்சிக்குத் தேர்வர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான நுழைவுத் தேர்வு தமிழகம் முழுவதும் உள்ள **18 தேர்வு மையங்களில் 13.11.2022 (ஞாயிற்றுக் கிழமை)** அன்று நடைபெற உள்ளது.

2023-ஆம் ஆண்டில் மத்தியக் தேர்வாணைக்குழு (UPSC) நடத்தும் குடிமைப் பணிகளுக்கான முதல்நிலைத்தேர்வு (Preliminary Examination-2023) எழுதுவதற்கு, **தமிழ்நாட்டைச் சார்ந்த** மாணவர்களிடமிருந்து இணையதளம் வழியாக விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. இப்பயிற்சி மையங்களில் ஏற்கனவே முதல்நிலைத் தேர்வுக்கு முழு நேரப் பயிற்சி பெற்றவர்கள் விண்ணப்பிக்க வேண்டாம்.

<u>1.கல்வி தகுதி:</u>

அ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகப் பட்ட படிப்பு

ஆ) வயது வரம்பு 01.08.2023 அன்று

<u>குறைந்தபட்ச வயது</u>: அனைத்து வகுப்பினருக்கும் 21

<u>அதிகப்பட்ச வயது</u>:

அ) ஆதிதிராவிடர்/பழங்குடியினர்/ ஆதிதிராவிடர் (அருந்ததியர்) 37 வயதுக்கு மிகாதவராக இருக்க வேண்டும்.

ஆ) மாற்றுத்திறனாளி மாணவர்கள் எந்த வகுப்பைச் சார்ந்தவராக இருப்பினும் 42 வயதுக்கு மிகாதவராக இருக்க வேண்டும்.

இ) பிற்படுத்தப்பட்டோர்/பிற்படுத்தப்பட்டோர்(முஸ்லிம்) / மிகபிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் 35 வயதுக்கு மிகாதவராக இருக்க வேண்டும்.

ஈ) பொதுப்பிரிவினர் 32 வயதுக்கு மிகாதவராக இருக்க வேண்டும்.

**2) நுழைவுத்தேர்வு மையங்கள்:**

சென்னை, செங்கல்பட்டு, வேலூர், விழுப்புரம், கடலூர், தருமபுரி,

சேலம், ஈரோடு, கோயம்புத்தூர், தஞ்சாவூர், திருச்சி, மதுரை, மற்றும் திருநெல்வேலி,

(இதில் ஏதேனும் ஒன்றைத் தேர்ந்தெடுக்கவும்)

**3) நுழைவுத்தேர்வுக்கு விண்ணப்பிக்கும் முறை:**

பயிற்சி பெற விரும்புவோர் அகில இந்தியக் குடிமைப்பணித் தேர்வுப் பயிற்சி மைய இணையதளமான www.civilservicecoaching.com மூலம் விண்ணப்பிக்கலாம்.

**4) நுழைவுச் சீட்டு:**

நுழைவுச் சீட்டு இப்பயிற்சி மைய இணைய தளத்தில் 09.11.2022 அன்று பதிவேற்றம் செய்யப்படும், இணையதள முகவரி www.civilservicecoaching.com-இல் பதிவேற்றம் செய்யப்பட்ட நுழைவுச் சீட்டைப் பதிவிறக்கம் செய்து, தேர்வு மையத்திற்கு அவசியம் எடுத்து வர வேண்டும். அசல் ஆதார் அட்டையினையும் ஆளறி அடையாளத்திற்காக எடுத்துவர வேண்டும்.

நுழைவுச்சீட்டு எக்காரணத்தினாலும் அஞ்சல் முலம் அனுப்பி வைக்கப்பட மாட்டாது.

**5) நுழைவுத் தேர்வு:**

தகுதியுடைய நபர்கள் 13.11.2022 (ஞாயிற்றுக் கிழமை) அன்று காலை 10.30 முதல் 1.00 மணி வரை நடைபெறும் நுழைவுத்தேர்வுக்கு அனுமதிக்கப்படுவர். (இந்திய வரலாறு மற்றும் இந்தியத் தேசிய இயக்கம், இந்திய மற்றும் உலகப் புவியியல், இந்திய அரசியலமைப்பு மற்றும் நிர்வாக முறை, பொருளாதாரம் மற்றும் சமுக வளர்ச்சி , பொது அறிவியல் , நடப்பு நிகழ்வுகள் சுற்றுப்புறச் சூழ்நிலை தொடர்பான பொது விவாதங்கள், உயிரின பரிமாண வளர்ச்சி, பருவநிலை மாற்றங்கள், ஆங்கிலம், CSAT மற்றும் பொதுதிறனறிவுத் தேர்வு ஆகியவற்றில் கேட்கப்படும் 150 கொள்குறி (Objective Type) வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும், தேர்வு எழுத வருவோருக்கு பயணப்படி/தினப்படி ஏதும் வழங்கப்பட மாட்டாது.

6) <u>தெரிவு செய்யும் முறை:</u>

எழுத்து தேர்வில் தகுதிபெற்ற மாணவர்கள் **தாங்கள் தேர்ந்தெடுக்கும் பயிற்சி மையத்தில்** இனவாரியாக உள்ள இடங்களுக்கு ஏற்ப தேர்ச்சி பெற்றதின் அடிப்படையில் நேரடியாகப் பயிற்சிக்கு அழைக்கப்படுவர்.

7) வருகைப் பதிவு மிகவும் கட்டாயம்.

8) பயிற்சி மைய விதிகளுக்கு உட்படாதவர் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்.

## <u>பயிற்சி மையங்கள் மற்றும் இனவாரியான இட ஒதுக்கீடு விவரங்கள்.</u>

### 1) <u>அகில இந்திய குடிமைப்பணித் தேர்வுப்பயிற்சி மையம், சென்னை-28</u>

அ) <u>முழுநேர மற்றும் பகுதிநேரப் பயிற்சி:</u>

நடைமுறை சேர்க்கை விதிகளும், நிலையான செயல்முறைகளும் பின்பற்றப்படும். தங்கும் வசதியுடனான முழுநேரப் பயிற்சிக்குரிய தேர்வர்கள் 225 மற்றும் பகுதிநேரப் பயிற்சிக்குரிய தேர்வர்கள் 100 பேர் கீழ்க்கண்ட முறையில் தேர்ந்தெடுக்கப்படுவர்.

| பயிற்சி முறை | ஆதிதிராவிடர் | அருந்ததியர் | பழங்குடியினர் | மிகபிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் | பிற்படுத்தப்பட்டோர் | பிற்படுத்தப்பட்டோர் (முஸ்லிம்) | பொதுப் பிரிவினர் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| (முழுநேரம்) விடுதியில் தங்கிப் பயிற்சி பெறுதல் | 89 | 18 | 6 | 40 | 54 | 7 | 11 | 225 |
| (பகுதிநேரம்) மாலை நேர பயிற்சி பெறுதல் | 40 | 8 | 2 | 18 | 24 | 3 | 5 | 100 |

❖ மாற்றுத்திறனாளிகளுக்கும் 4% இடங்கள் ஒதுக்கீடு செய்யப்படும்.

ஆ) <u>கட்டணம் முழுநேரம் மற்றும் பகுதிநேரம்:</u> ஏதுமில்லை

| வகுப்பு(இனவாரியாக) | காப்புத் தொகை (திரும்ப வழங்கக்கூடியது) |
|---|---|
| ஆதிதிராவிடர்/ அருந்ததியர்/ பழங்குடியினர்/ பிற்படுத்தப்பட்டோர்/ பிற்படுத்தப்பட்டோர் (முஸ்லிம்)/ மிகபிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர்/ பொதுப் பிரிவினர் | ரூ.3000/- |

இ) வகுப்பு :

அ) முழுநேரப் பயிற்சிக்கு தேர்ந்தெடுக்கப்படும் மாணவர்களின் பயிற்சி நேரம் காலை 10.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை

ஆ) பகுதி நேரப் பயிற்சிக்குத் தேர்ந்தெடுக்கும் மாணவர்களின் பயிற்சி நேரம் வாராந்திர நாட்களில் மாலை 6.00 மணி முதல் 8.00 மணி வரையிலும், சனி மற்றும் ஞாயிற்றுக் கிழமைகளில் காலை 10.30 மணி முதல் மாலை 5.30 மணி வரை

ஈ) விடுதி :

அ) முழுநேரப் பயிற்சிக்கு தேர்ந்தெடுக்கப்படும் மாணவர்களுக்குக் கட்டணமின்றிப் பயிற்சி, தங்கும் வசதி மற்றும் உணவு அளிக்கப்படும்.

ஆ) பகுதி நேரப் பயிற்சிக்குத் தேர்ந்தெடுக்கப்படும் மாணவர்களுக்கு விடுதி வசதி வழங்கப்பட மாட்டாது.

2) அண்ணா நூற்றாண்டு குடிமைப் பணித்தேர்வுப் பயிற்சி நிலையம் கோயம்புத்தூர்

அ) முழுநேர பயிற்சி:

நடைமுறை சேர்க்கை விதிகளும், நிலையான செயல்முறைகளும் பின்பற்றப்படும். தங்கும் வசதியுடனான முழுநேரப் பயிற்சிக்குரிய தேர்வர்கள் 100 பேர் தேர்ந்தெடுக்கப்படுவர்.

| பயிற்சி முறை | ஆதிதிராவிடர் | அருந்ததியர் | பழங்குடியினர் | மிகபிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் | பிற்படுத்தப்பட்டோர் | பிற்படுத்தப்பட்டோர் (முஸ்லிம்) | பொதுப் பிரிவினர் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| (முழுநேரம்) விடுதியில் தங்கிப் பயிற்சி பெறுதல் | 40 | 08 | 02 | 18 | 24 | 03 | 05 | 100 |

❖ மாற்றுத்திறனாளிகளுக்கும் 4% இடங்கள் ஒதுக்கீடு செய்யப்படும்.

அ) கட்டணம் முழுநேரம் : ஏதுமில்லை

| வகுப்பு(இனவாரியாக) | காப்புத் தொகை (திரும்ப வழங்கக்கூடியது) |
|---|---|
| ஆதிதிராவிடர்/ அருந்ததியர்/ பழங்குடியினர்/ பிற்படுத்தப்பட்டோர்/ பிற்படுத்தப்பட்டோர் (முஸ்லிம்)/ மிகபிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர்/ பொதுப் பிரிவினர் | ஏதுமில்லை |

இ) வகுப்பு :

முழுநேரப் பயிற்சிக்கு தேர்ந்தெடுக்கப்படும் மாணவர்களின் பயிற்சி நேரம் காலை 10.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை

ஈ) விடுதி :

முழுநேரப் பயிற்சிக்கு தேர்ந்தெடுக்கப்படும் மாணவர்களுக்குக் கட்டணமின்றிப் பயிற்சி, உணவு மற்றும் தங்கும் வசதி அளிக்கப்படும்.

3) <u>அண்ணா நூற்றாண்டு குடிமைப் பணித்தேர்வுப் பயிற்சி நிலையம். மதுரை</u>

| பயிற்சி முறை | ஆதிதிராவிடர் | அருந்ததியர் | பழங்குடியினர் | மிகபிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் | பிற்படுத்தப்பட்டோர் | பிற்படுத்தப்பட்டோர் (முஸ்லிம்) | பொதுப் பிரிவினர் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| (முழுநேரம்) விடுதியில் தங்கிப் பயிற்சி பெறுதல் | 40 | 08 | 02 | 18 | 24 | 03 | 05 | 100 |

❖ மாற்றுத்திறனாளிகளுக்கும் 4% இடங்கள் ஒதுக்கீடு செய்யப்படும்.

அ) **கட்டணம் முழுநேரம் : ஏதுமில்லை**

| வகுப்பு(இனவாரியாக) | காப்புத் தொகை (திரும்ப வழங்கக்கூடியது) |
|---|---|
| ஆதிதிராவிடர்/ அருந்ததியர்/ பழங்குடியினர்/ பிற்படுத்தப்பட்டோர்/ பிற்படுத்தப்பட்டோர் (முஸ்லிம்)/ மிகபிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர்/ பொதுப் பிரிவினர் | ஏதுமில்லை |

இ) **வகுப்பு :**

முழுநேரப் பயிற்சிக்கு தேர்ந்தெடுக்கப்படும் மாணவர்களின் பயிற்சி நேரம் காலை 10.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை

ஈ) **விடுதி :**

முழுநேரப் பயிற்சிக்கு தேர்ந்தெடுக்கப்படும் மாணவர்களுக்குக் கட்டணமின்றிப் பயிற்சி, உணவு மற்றும் தங்கும் வசதி அளிக்கப்படும்.

06.10.2022

முதல்வர்

அகில இந்திய குடிமைப்பணித் தேர்வுப் பயிற்சி மையம்,

சென்னை-28

06/10/2022